**கவனிக்க** .- 2014.10.17 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி I : தொகுதி (III), பகுதி III மற்றும் பகுதி IV (அ) ஆகியன பிரசுரிக்கப்படவில்லை.

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1886 - 2014 ඔක්තෝබර් මස 24 වැනි සිකුරාදා - 2014.10.24

*1886 ஆம் இலக்கம் - 2014 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 24 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி IV (ஆ) - உள்ளூராட்சி

**(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)**


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | - | வரவு செலவுக் கூற்றுகள் | - |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | - | வரவு செலவு திரட்டுகள் | 1183 |
| உள்ளூராட்சி அறிவித்தல்கள் | 1180 | ஆதன விற்பனைகள் | - |
| துணைவிதிகள் | - | ஆயவிற்பனையும் குத்தகையும் | - |
| உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள் | - | வீதிச் செயற்குழுவின் அறிவித்தல்கள் | - |
| | | நானாவித அறிவித்தல்கள் | 1184 |


**கவனிக்க**.- ஒதுக்கீடு (திருத்தச்) சட்டமூலம் 2014, செத்தெம்பர் மாதம் 19 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகிறது.

**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2014, நவெம்பர் மாதம் 14 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2014, ஒற்றோபர் மாதம் 31 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டம் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**பீ. எச். எல். வீ. டீ சில்வா**,
அரசாங்க அழுத்தகர் (பதில்).

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2014 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.

இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

# உள்ளூராட்சி அறிவித்தல்கள்

## பருத்தித்துறை பிரதேச சபை - புலோலி

*1987 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான 1975 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க களரிகளுக்கு உரிமம் அளித்தற் சட்டம்*

இதன் கீழ் காணப்படும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள நபர், இடத்தில் அவரின் பெயருக்கு எதிராக குறிப்பிடப்பட்டுள்ள களரியை 2015 ஆம் ஆண்டில் வைத்திருப்பதற்கு மேற்படி உரிமமளித்தல் கட்டளைச் சட்டத்தின் 6 ஆம் பிரிவிற்கமைய இத்தால் அறிவித்தல் கொடுக்கப்படுகிறது.

அத்தகைய உரிமம் அக்களரிக்கு வழங்கப்படுவதற்கு ஆட்சேபனை தெரிவிக்க விரும்பும், சொல்லப்பட்ட களரிக்கென உத்தேசிக்கப்பட்டிருக்கும் வளவுக்கு அண்மையில் வதியும் எந்த ஆளும் தனது ஆட்சேபனைக்கான ஏதுக்கள் பற்றிய எழுத்து மூலமான கூற்றொன்றினை வர்த்தமானியில் இவ்வறிவித்தல் வெளியிடப்படும் திகதியிலிருந்து நான்கு வாரங்களுக்குள் இரு பிரதிகளில் எனக்கு அனுப்பி வைக்குமாறு வேண்டப்படுகின்றீர்கள்.

பூ. சஞ்சீவன்,
தவிசாளர்,
பருத்தித்துறை பிரதேச சபை.

பருத்தித்துறை பிரதேச சபை,
புலோலி,
2014, செத்தெம்பர் 24.

**அட்டவணை**

| விண்ணப்பதாரியின் பெயரும் முகவரியும் | களரியின் தலைவரா, செயலாளரா அல்லது முகாமையாளரா என்பது | களரியின் பெயர் | களரி அதனது செயற்பாடுகளை நடாத்த உத்தே சித்திருக்கின்ற மனைத்தளம் |
|---|---|---|---|
| கிட்டிணன் சிவப்பிரகாசம், கூவில், புலோலி தெற்கு, புலோலி | செயலாளர் | றோயல் பொழுதுபோக்குக் கழகம் | புனிதநகர் வீதி, ஆனைவிழுந்தான், புலோலி |

10-790

---

## முன்னேற்றமடையச் செய்த பிரதேசமாகப் பிரகடனப்படுத்தல்

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 134 ஆம் பிரிவின் (1) ஆவது உப பிரிவினால் பிரதேச சபைகளுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம் போபே-போத்தல பிரதேச சபையினால் 2013, யூன் 24 ஆந் திகதி நடாத்தப்பட்ட சபைக் கூட்டத்தின் தீர்மானம் இல. 1 இன் கீழ் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட கீழ்க் காணும் பிரேரணைக்கு அச்சட்டத்தின் மேற்கூறிய உப பிரிவுகளால் பிரதேச உள்ளூராட்சி உதவி ஆணையாளருக்கு கிடைக்கப்பெற்றுள்ள அதிகாரங்களின் கீழ் காலி நிருவாக மாவட்டப் பிரதேச உள்ளூராட்சி ஆணையாளராகிய எரன்தி உமங்கா மென்திஸ் ஆகிய என்னால் அனுமதி கொடுக்கப்பட்டுள்ளதென்பதை பொது மக்களுக்கு இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

எரன்தி உமங்கா மென்திஸ்,
உள்ளூராட்சி உதவி ஆணையாளர்,
காலி நிருவாக மாவட்டம்.

உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம்,
காலி,
2014, யூன் 30.

**தீர்மானம்**

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 134 ஆம் பிரிவின் (1) ஆவது உப பிரிவினால் பிரதேச சபைகளுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம் போபே-போத்தல பிரதேச சபை அதிகாரப் பிரிவிற்குள் அமைந்துள்ள கீழே அட்டவணையில் விபரிக்கப்படுகின்ற பிரதேசம் முன்னேற்றமடையச் செய்த பிரதேசமொன்றாக ஏற்றுக்கொள்ளப்படல் வேண்டும் எனவும்,

அவ்வாறு ஏற்றுக்கொள்ளப்படுகின்ற தீர்மானம் காலி நிருவாக மாவட்டப் பிரதேச உள்ளூராட்சி உதவி ஆணையாளரின் அனுமதியைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும்,

போபே போத்தல பிரதேச சபை தீர்மானிக்கின்றது.

**அட்டவணை**

போபே-போத்தல பிரதேச சபை அதிகாரப் பிரிவிற்குள் அமைந்துள்ள இல. 111, 111A, 111B, 111C, 111D, 111E, 111F,

111G, 114, 114A, 114B, 114C, 114D, 115, 115A, 115B, 117, 117A, 117B, 117C, 120, 120A, 121, 123, 123A, 123B, 123C, 123D, 124, 124A, 124B, 124C, 125, 125A, 126, 126A, 126B, 126C, 127, 127A, 127B, 127C, 127D, 127E, 105, 106, 107, 107A, 108, 108A, 108B வரையுள்ள கிராம சேவை அலுவலர்கள் பிரிவுகளுக்கு உரியதான (வக்வெல்ல பாதை, ஹபுகல பட்டுவன்துடாவ பாதை, டார்லின்டன் வத்தை பாதை, பெங்கிரிவத்த பாதை, மாம்பிட்டிய வட்டரெக பாதை, கலேகான கஹதுவ பாதை, ஸ்ரீ ஸுதர்ஷனாராம பாதை, வட்டரெக போப்பே பாதை, வக்வெல்ல கிந்தோட்டை பாதை, லெந்தேவ வட்டரெக பாதை, கித்துலம்பிட்டிய கம்ஸபா பாதை, ஹபுகல கித்துலம்பிட்டிய பாதை, நாகருக்காராம பாதை, ஸ்ரீ பியரத்ன பாதை, போப்பே ஒழுங்கை, குருந்துவத்த வெலிபிட்டிமோதர பாதை, கலேகான கிந்தோட்டை பாதை, கஹதுவ நாவின்ன பாதை, பியதிகம உக்வத்தை பாதை, ஹபுகல பெலவத்தை பாதை, பத்தேகம பாதை, நாவின்ன பாதை, நாவின்ன பொகரமுல்லகொட பாதை, உலுவிட்டிகே கொடகன்த பாதை, ரிஜிஸ் இலேபெரும மாவத்தை, ஜயஸுமனாராம பன்சல பாதை, கெமுனு மாவத்தை, மானிகெவத்தை பாதை, கோட்டெகெவத்தை பாதை, ஓப்பாத்த பாதை, ஓப்பாத்தகொட பாதை, பட்டுவந்துடாவ பாதை, ஹோலுவாகொட பாதை, பொகரகொட பாதை, ஹேனகெவத்தை பாதை, பன்னமக பாதை, ஹவ்பெகெவத்தை பாதை, மீப்பாவல பன்ஸல பாதை, மீப்பாவல பன்சல ஒழுங்கை பாதை, மூலனஹேன பாதை, பன்வில பாதை, பெனிதெனிய பாதை, பஸ் மாலுவ பாதை, மொரிஸ் பாதை, பென்தி பாதை, ஸனிஸய்ட் கார்ட்ன்ஸ் பாதை, கஹதுவ வத்தை பாதை, கொடகன்த கராப்பிட்டிய பாதை, கிரிமெட்டிய முல்ல பாதை, போகஹலியத்த பாதை, போத்தல நராவல பாதை, காலி வீதி, பஞ்சதூபாராம பாதை, கபுஹெம்பல பாதை, லபுதுவ குருன்த பாதை, கொடதுவ பாதை, லபுதுவ கொடகன்த ஆகிய பிரதேசங்களில் தற்போதைக்கு வரிப்பணம் அறவிடப்படாத எஞ்சிய பிரதேசங்களுடன் கீழ்க்காணும் எல்லைகளுக்குள் அமைந்துள்ள எஞ்சிய பிரதேசங் களுடன்),

வடக்கு : குடாவே கங்கை ஜின்கங்கைக்குப் பாய்கின்ற இடத்திலிருந்து 40 சங்கிலிகள் வடக்கில் ஆரம்பமாகி பீ. ஆர். 7 கண்டி நீட்டமாக 68 சங்கிலிகள் சென்று ஹோலுவாகொட ஓடை ஜின்கங்கையில் சங்கமமாகும் இடத்தை அடைந்து அங்கிருந்து ஹோலுவாகொடை ஓடை நீட்டாக 90 சங்கிலிகள் அவ்வோடையின் எனிகட்டை அடைந்து அங்கிருந்து வடக்கிற்கு 100 சங்கிலிகள் வயல் மத்தியினூடாக கங்கபட பத்துல எல்லை நீட்டாகச் சென்று காலி-பத்தேகம பாதையில் 7 ஆவது மைல்தூண் அருகில் 8/1 சாக்கடை நீர் செல்லும் வழி (போக்கு) அருகிற்கு வந்து அவ்விடத்திலிருந்து காலி பத்தேகம பாதையில் போத்தல சந்தி வரை 6 சங்கிலிகள் வந்து போத்தல நராவல பாதையில் நராவலப் பக்கத்திற்கு 68 கட்டுஅத்த ஓடை பாலம் வரை வந்து கட்டுஅத்த ஓடை நீட்டாகச் சென்று காலி வந்துரம்ப பாதையை பிரிக்கும் இடத்திற்கு வந்து;

கிழக்கு : அவ்விடத்திலிருந்து அப்பாதை நீட்டாக காலிப் பகுதிக்கு 20 சங்கிலிகள் கிரேஸ்லேன் தேயிலை தொழிற்சாலை அருகில் பாதை இல. 7/5 கொண்ட சாக்கடை நீர் செல்லும் வழி வரை (போக்கு) சென்று 60 சங்கிலிகள் சியம்பலாகஹவத்தையினூடாக மாதொல ஓடைக்கும் அவ்விடத்திலிருந்து நீட்டாக 30 சங்கிலிகள் சென்று பொத்துகும்புற ஊடாக கெட்டே ஓடை நீட்டமாக 94 சங்கிலிகள் அவ்விடத்திலிருந்து ஓடை ஊடாக 4 சங்கிலிகள் நய்னாதுவ சாக்கடை நீர் ஓடும் வழி (போக்கு) வரை 03 சங்கிலிகளும் பொல்கொரட்டுவ வயல் வரை 08 சங்கிலிகளும் சென்று சேன்துதுவ என்னும் காணியை அடைந்து அக்காணியின் தெற்கு எல்லையில் 10 சங்கிலிகள் தும்மலவில ஓடையை அடைந்து ஓடை நீட்டாக தென்கிழக்குப் பக்கத்திற்கு 40 சங்கிலிகள் (விஜயானந்தை மாவத்தை) 2/2 சாக்கடை நீர் செல்லும் வழியை (போக்கு) அடைந்து அவ்விடத்திலிருந்து 50 சங்கிலிகள் விஜயானந்த மாவத்தை நீட்டாக தென்கிழக்கு பகுதிக்கு ;

தெற்கு : அவ்விடத்திலிருந்து மேற்குப் பகுதிக்கு 100 சங்கிலிகள் கும்புறுயாய ஊடாகச் சென்று காலி லபுதுவ பாதையில் (மொரிஸ் பாதை) லபுதுவ சந்தியிலிருந்து 90 சங்கிலிகள் தூரத்தில் அமைந்துள்ள மீபகேவத்த என்ற பெயருடைய இடத்தை அடைந்து அவ்விடத்திலிருந்து பிரதான பாதையில் (மொரிஸ் பாதையினூடாக) லபுதுவ சந்திக்கும் லபுதுவயிலிருந்து கராப்பிட்டிய கலேகான ஊடாக பிரதான பாதை மத்திய ரேகையினூடாக கிந்தோட்டையிலிருந்து உக்வத்தைக்குச் செல்லும் பாதையில் மத்திய ரேகை ஊடாக 45 சங்கிலிகள் சென்று கோப்ப ஓடையை பிரிக்கும் இடத்திற்குச் சென்று அங்கிருந்து கோப்ப ஓடையில் மத்திய ரேகையினூடாக 50 சங்கிலிகள் சென்று காலி கொழும்பு புகையிரதப் பாதைக்கு ஓடை சந்திக்கும் இடம் வரை வந்து அவ்விடத்திலிருந்து புகையிரதப் பாதையின் மத்திய ரேகை நீட்டாக கிந்தோட்டை புகையிரதப் பாலத்தின் மத்தியம் வரை;

மேற்கு : அவ்விடத்திலிருந்து ஜின்கங்கையின் மத்திய ரேகை நீட்டாக வடக்கிற்கு (கங்கைக்கு மேலாக) போய் ஆரம்பமாகும் இடத்திற்குச் சென்று.

10-794

---

**பதுளை மாநகர சபை**

*1947 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க மாநகர சபைக் கட்டளைச் சட்டத்தின் 48(1) ஆவது பிரிவின் கீழ் செய்யப்படும் அறிவித்தல்*

1947 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க மாநகர சபைக் கட்டளைச் சட்டத்தின் 48(1) ஆவது பிரிவின் படி ஊவா மாகாணத்தின் பதுளை மாவட்ட பதுளை மாநகர சபையின் மூலம் இங்கு கீழ் உள்ள அட்டவணையில் காட்டப்பட்டுள்ள பாதையை பொதுவான உபயோகத்திற்காக பதுளை மாநகர சபைக்கு உரிமையாக்குவதற்கு 2014.08.08 ஆந் திகதிய 6 ஆம் இலக்க பிரேரணையின் மூலம் சபையினால் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

பிரதேசப் பொது மக்களினாலாவது அல்லது சம்பந்தப்பட்ட பாதைக்குரிய இடங்களுக்கு உரிமையாளர்களாக உரிமை கோரும் தரப்பினர்களினாலாவது ஏதேனும் எதிர்ப்புத் தெரிவிப்பதேயானால் இந்த அறிவித்தல் வர்த்தமானியில் பிரசுரமான திகதியில் இருந்து 30 நாட்களுக்குள் தங்களது எதிர்ப்பைச் சாட்சிகளுடன் எழுத்து மூலமாக மாநகர சபைக்கு அறிவிக்க நடவடிக்கை எடுக்குமாறு இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

சொல்லப்பட்ட கால எல்லைக்குள் இவ்வறிவித்தலின் படி செயல்படாவிடின் எதிர்ப்புத் தெரிவிக்கப்படவில்லை எனக் கருதி இந்த வர்த்தமானி அறிவித்தல் மூலம் பிரசுரிக்கப்பட்டுள்ளதன் படி கீழ்க்காணும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பாதையை பதுளை மாநகர சபைக்கு உரிமையான பாதையாக ஏற்றுக்கொள்ளப்பட்டு, நிர்வாகம் செய்யப்படும் என்பதைப் பிரகடனப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என இத்தால் அறிவிக்கின்றேன்.

உபாலி நிஸ்ஸங்க குணசேகர,
மாநகரபிதா,
பதுளை.

மாநகர சபை அலுவலகம்,
பதுளை,
2014, செத்தெம்பர் 29.

**அட்டவணை**

| தொடர் இலக்கம் | பாதையின் பெயர் | ஆரம்பிக்கும் இடம் | முடிவுறும் இடத்தின் வரிப்பண இலக்கம் | இடதுபக்க வரிப்பண இலக்கம் | வலதுபக்க வரிப்பண இலக்கம் | நீளம் மீற்றர் | அகலம் மீற்றர் |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | நிக்கதென்ன பாதை இரண்டாம் ஒழுங்கை | நிக்கதென்ன பாதையும் இரண்டாம் கிளைப் பாதையும் | தனியார் காணி | 48/6, 48/5, 54 | 48/10, 48/11, 48/8 | 39 | 2.4 |

10-846

---

**பதுளை மாநகர சபை**

*1947 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க மாநகர சபைக் கட்டளைச் சட்டத்தின் 48(1) ஆவது பிரிவின் கீழ் செய்யப்படும் அறிவித்தல்*

1947 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க மாநகர சபைக் கட்டளைச் சட்டத்தின் 48(1) ஆவது பிரிவின் படி ஊவா மாகாணத்தின் பதுளை மாவட்ட பதுளை மாநகர சபையின் மூலம் இங்கு கீழ் உள்ள அட்டவணையில் காட்டப்பட்டுள்ள பாதையை பொதுவான உபயோகத்திற்காக பதுளை மாநகர சபைக்கு உரிமையாக்குவதற்கு 2014.08.08 ஆந் திகதிய 6 ஆம் இலக்க தீர்மானத்தின் மூலம் சபையினால் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

பிரதேசப் பொது மக்களினாலாவது அல்லது சம்பந்தப்பட்ட பாதைக்குரிய இடங்களுக்கு உரிமையாளர்களாக உரிமை கோரும் தரப்பினர்களினாலாவது ஏதேனும் எதிர்ப்புத் தெரிவிப்பதேயானால் இந்த அறிவித்தல் வர்த்தமானியில் பிரசுரமான திகதியில் இருந்து 30 நாட்களுக்குள் தங்களது எதிர்ப்பைச் சாட்சிகளுடன் எழுத்து மூலமாக மாநகர சபைக்கு அறிவிக்க நடவடிக்கை எடுக்குமாறு இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

சொல்லப்பட்ட கால எல்லைக்குள் இவ்வறிவித்தலின் படி செயல்படாவிடின் எதிர்ப்புத் தெரிவிக்கப்படவில்லை எனக் கருதி இந்த வர்த்தமானி அறிவித்தல் மூலம் பிரசுரிக்கப்பட்டுள்ளதன் படி கீழ்க்காணும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பாதையை பதுளை மாநகர சபைக்கு உரிமையான பாதையாக ஏற்றுக்கொள்ளப்பட்டு, நிர்வாகம் செய்யப்படும் என்பதைப் பிரகடனப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என இத்தால் அறிவிக்கின்றேன்.

உபாலி நிஸ்ஸங்க குணசேகர,
மாநகரபிதா,
பதுளை.

மாநகர சபை அலுவலகம்,
பதுளை,
2014, செத்தெம்பர் 29.

**அட்டவணை**

| தொடர் இலக்கம் | பாதையின் பெயர் | ஆரம்பிக்கும் இடம் | முடிவுறும் இடத்தின் வரிப்பண இலக்கம் | இடதுபக்க வரிப்பண இலக்கம் | வலதுபக்க வரிப்பண இலக்கம் | நீளம் மீற்றர் | அகலம் மீற்றர் |
|---|---|---|---|---|---|---|---|
| 01 | ஸ்பிரிங்வெளிப் பாதையின் இரண்டாம் ஒழுங்கை பாதை வீரியபுரவுக்கு இணையும் கிளைப்பாதை | ஸ்பிரிங்வெளிப் பாதை இரண்டாம் ஒழுங்கை பாதை | தனியார் காணி | 169/8, 169/7, 169/6, 169/6A, 169/5, 169/9C | 169/30, 169/32, 169/10 | 210 | 3.05 |

10-847

# வரவு செலவு திரட்டுகள்

**கடுவெல மாநகர சபை**

2015 ஆம் ஆண்டின் நிகழ்ச்சித்திட்டங்கள் பற்றிய வரவு செலவுத்திட்டம்

கடுவெல மாநகர சபையின் 2015 ஆம் ஆண்டுக்கான நிகழ்ச்சித்திட்டங்கள் பற்றிய வரவு செலவுத்திட்ட ஆவணம் 2014, ஒற்றோபர் 24 ஆந் திகதியிலிருந்து 2014, நவெம்பர் 4 ஆந் திகதி வரை (அரசாங்க விடுமுறை தினங்கள் மற்றும் ஞாயிற்றுக்கிழமைகள் தவிர்ந்து) அலுவலக நேரங்களில் கடுவெல மாநகர சபையின் பிரதான அலுவலகத்தில் பொது மக்களின் பரிசீலனைக்காக வைக்கப்பட்டுள்ளதென (252 ஆம் அத்தியாயமான) மாநகர சபைகள் கட்டளைச்சட்டத்தின் 212 ஆம் பிரிவின் பிரகாரம் இத்தால் அறியத்தருகின்றேன்.

ஜீ. எச். புத்ததாச,
மாநகர முதல்வர்,
கடுவெல மாநகரசபை.

மாநகரசபை அலுவலகம்,
கடுவெல,
2014, ஒற்றோபர் 3.

10-776/1

---

**கடுவெல மாநகர சபை**

2014 ஆம் ஆண்டின் குறை நிரப்பு வரவு செலவுத்திட்டம்

கடுவெல மாநகர சபையின் 2014 ஆம் ஆண்டின் குறைநிரப்பு வரவு செலவுத்திட்ட ஆவணம் 2014, ஒற்றோபர் 24 ஆந் திகதியிலிருந்து 2014, நவெம்பர் 4 ஆந் திகதி வரை (அரசாங்க விடுமுறை தினங்கள் மற்றும் ஞாயிற்றுக்கிழமைகள் தவிர்ந்த) அலுவலக நேரங்களில் கடுவெல மாநகர சபையின் பிரதான அலுவலகத்தில் பொது மக்களின் பரிசீலனைக்காக வைக்கப்பட்டுள்ளதென (252 ஆம் அத்தியாயமான) மாநகர சபைகள் கட்டளைச்சட்டத்தின் 214 ஆம் பிரிவின் பிரகாரம் இத்தால் அறியத்தருகின்றேன்.

ஜீ. எச். புத்ததாச,
மாநகர முதல்வர்,
கடுவெல மாநகரசபை.

மாநகரசபை அலுவலகம்,
கடுவெல,
2014, ஒற்றோபர் 3.

10-776/2

# நானாவித அறிவித்தல்கள்

## பஸ்கொட பிரதேச சபை

வியாபார உரிமைப்பத்திர கட்டணங்கள் விதித்தல் - 2015

பஸ்கொட பிரதேச சபையினால் 2014 ஆம் வருடத்தின் யூலை மாதம் 22 ஆந் திகதி நடத்தப்பட்ட கூட்டத்தின் தீர்மான இலக்கம் 05 (01) (i) இன் கீழ் கீழே காட்டப்பட்டுள்ள பிரேரணையை ஏகமனதாக சபை ஏற்றுக்கொண்டதென பொது மக்களுக்கு இத்தால் அறியத்தருகின்றேன்.

மஹிந்த ஈஸ்வரகே,
தலைவர்,
பஸ்கொட பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
பஸ்கொட,
2014, யூலை 22.

### தீர்மானங்கள்

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 149 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட்ட 147 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (ஆ) பிரிவினால் வழங்கப்பட்ட அதிகாரத்தின்படி பஸ்கொட பிரதேச சபையினால் பஸ்கொட வலுப் பிரதேசத்தினுள் கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள வியாபாரங்கள் தொடர்பாக I ஆம் நிரலில் குறித்த வியாபாரங்களுக்கு II ஆம் நிரலில் குறித்த தொகையை வருடாந்த வரிமதிப்பீட்டிற்கிணங்க வியாபார உரிமைப்பத்திரக் கட்டணமாக 2015 ஆம் ஆண்டு தொடர்பாக வரிமதிப்புக் கட்டணத்தை உரிய வருடத்திற்கு முன்னைய வருடத்தின் வருமானத்தில் இருந்து விதித்து அறவிடப்பட வேண்டுமென்றும் இதனைத் தவிர 10% முத்திரைக் கட்டணத்தையும் அறவிடப்பட வேண்டுமென பஸ்கொட பிரதேச சபை தீர்மானித்துள்ளது.

### அட்டவணை - 1

| | I ஆம் நிரல் வியாபார வகைகள் | II ஆம் நிரல் வருடத்துக்குரிய விதிக்கப்பட்ட வியாபார உரிமைக் கட்டணம் | | |
|---|---|---|---|---|
| | | ரூ. 750 இற்கும் குறைந்த வருடாந்தப் பெறுமதிக்கு ரூபா ச. | ரூ. 751 இல் இருந்து ரூ. 1,500 வரையிலான வருடாந்தப் பெறுமதிக்கு ரூபா ச. | ரூ. 1,500 இற்கு மேற்பட்ட வருடாந்தப் பெறுமதிக்கு ரூபா ச. |
| 01. | விடுதியொன்றை நடாத்துதல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 02. | ஹோட்டல் ஒன்று நடாத்துவதற்கு | 500 0 | 750 0 | 1,000 0 |
| 03. | சாப்பாட்டுக் கடையொன்று அல்லது போசனசாலை ஒன்றை தேனீர், கோப்பிக் கடை வைத்திருத்தல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 04. | பேக்கரியொன்றை வைத்திருத்தல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 05. | இனிப்புப் பண்டங்கள் மற்றும் சமைக்கப்பட்ட உற்பத்தி செய்யும் நிலையம் நடாத்தல் | | | |
| 06. | பசுப் பட்டியொன்று, பால் உற்பத்தி நிலையம் ஒன்று வைத்திருத்தல்– | 500 0 | 750 0 | 1,000 0 |
| | (1) பசுக்கள் 5 வரை | | | |
| | (2) பசுக்கள் 5 இற்கு மேற்பட்ட | | | |
| 07. | மீன் விற்பனை செய்யும் நிலையமொன்றை வைத்திருத்தல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 08. | இறைச்சி விற்பனை செய்யும் நிலையமொன்றை வைத்திருத்தல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 09. | சலவைத் தொழிலகம் அல்லது துணி அழுத்தும் நிலையமொன்று வைத்திருத்தல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 10. | தனியார் வியாபார நிலையமொன்று நடத்தல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 11. | முடிவெட்டும் நிலையம் நடாத்துதல் அல்லது முடி அலங்காரம் செய்யும் நிலையம் நடாத்துதல் | 500 0 | 750 0 | 1,000 0 |

| | I ஆம் நிரல் வியாபார வகைகள் | II ஆம் நிரல் வருடத்துக்குரிய விதிக்கப்பட்ட வியாபார உரிமைக் கட்டணம் | | |
|---|---|---|---|---|
| | | ரூ. 750 இற்கும் குறைந்த வருடாந்தப் பெறுமதிக்கு | ரூ. 751 இல் இருந்து ரூ. 1,500 வரையிலான வருடாந்தப் பெறுமதிக்கு | ரூ. 1,500 இற்கு மேற்பட்ட வருடாந்தப் பெறுமதிக்கு |
| | | ரூபா ச. | ரூபா ச. | ரூபா ச. |
| 12. | குளிர்பானங்கள் உற்பத்தி செய்யும் நிலையமொன்றை வைத்திருத்தல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 13. | மாடுகள் அறுக்கப்படும் தொழுவம் ஒன்று பேணுதல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 14. | உல்லாச வியாபாரம் ஒன்றை வைத்திருத்தல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 15. | உல்லாச பிரயாண சபையில் பதிவு செய்யப்பட்டுள்ள ஹோட்டல் ஒன்று அல்லது விடுதியொன்றை வைத்திருத்தல் | முன்னைய வருட வருமதியில் 1% உத்தரவுப்பத்திர கட்டணம் அறவிடப்படும். | | |

10-795/1

---

**பஸ்கொட பிரதேச சபை**

கைத்தொழில்களுக்கான வரி - 2015

பஸ்கொட பிரதேச சபையினால் 2014 ஆம் ஆண்டு யூலை மாதம் 22 ஆந் திகதி நடத்தப்பட்ட கூட்டத்தின் தீர்மான இலக்கம் 05 (01) (ii) இன்கீழ் கீழே காட்டப்பட்டுள்ள பிரேரணையை ஏகமனதாக சபை ஏற்றுக்கொண்டதென பொது மக்களுக்கு இத்தால் அறியத்தருகின்றேன்.

மஹிந்த ஈஸ்வரகே,
தலைவர்,
பஸ்கொட பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
பஸ்கொட,
2014, யூலை 22.

**தீர்மானங்கள்**

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 150 ஆம் பிரிவுகளின் (1) ஆம் உட்பிரிவின்படி பிரதேச சபைகளுக்கு வழங்கப்பட்ட அதிகாரத்தின் பிரகாரம் உள்ளூராட்சி துணைவிதிக்கேற்ப-

(அ) பஸ்கொட பிரதேச சபை வலுப் பிரதேசத்தினுள் 2015 ஆம் ஆண்டில் நடத்தப்பட்டு வரும் கீழே அட்டவணையின் I ஆம் நிரலில் குறிப்பிடப்பட்டுள்ளவாறான வியாபாரங்கள் தொடர்பாக அட்டவணையின் II ஆம் நிரலின்படி ஒவ்வொரு வியாபாரத்துக்குமான வருடாந்த வரியை முன்னைய வருட வருமானத்திலிருந்து 2015 ஆம் வருடத்திற்கு விதிக்கப்பட்டு அறவிடப்படவும்,

(ஆ) 2014 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரை நடத்தப்பட்டு வரும் கைத்தொழில் தொடர்பான வரியை 2015, ஏப்பிறல் மாதம் 1 ஆந் திகதி கைத்தொழிலை நடத்துபவரினால் பஸ்கொட பிரதேச சபைக்கு வழங்கப்பட வேண்டுமென இதன் மூலம் அறியத்தருவதோடு,

(இ) 2015 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்படவிருக்கும் ஏதாவது கைத்தொழிலாக இருக்குமிடத்து உரிய வரியை, கைத்தொழிலினை ஆரம்பித்து மூன்று மாதங்களுக்குள் கைத்தொழிலினை நடத்துபவரினால் பஸ்கொட பிரதேச சபைக்கு வழங்கப்பட வேண்டுமென இதன் மூலம் அறியத்தருகின்றேன்.

***அட்டவணை - 01***

| | *I ஆம் நிரல்* *வியாபார வகைகள்* | *II ஆம் நிரல்* *வருடத்துக்குரிய விதிக்கப்பட்ட வியாபார உரிமைக் கட்டணம்* | | |
|---|---|---|---|---|
| | | *ரூ. 750 இற்கும் குறைந்த வருடாந்தப் பெறுமதிக்கு* | *ரூ. 751 இல் இருந்து ரூ. 1,500 வரையிலான வருடாந்தப் பெறுமதிக்கு* | *ரூ. 1,500 இற்கு மேற்பட்ட வருடாந்தப் பெறுமதிக்கு* |
| | | *ரூபா ச.* | *ரூபா ச.* | *ரூபா ச.* |
| 1. | சுண்ணாம்பு சுடுதல் அல்ல களஞ்சியப்படுத்தல் நிலையமொன்று வைத்திருத்தல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 2. | பிளாஸ்டிக், பைபர், கண்ணாடிச் சாமான்கள் உற்பத்தி செய்யும் நிலையம் ஒன்று வைத்திருத்தல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 3. | பாக்கு, காய்ச்சி தயாரிக்கும் நிலையம் நடாத்தல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 4. | பாணி உற்பத்தி செய்தல், கருப்பட்டி உற்பத்தி செய்யும் நிலையம் நடாத்தல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 5. | சாதாரண ஆலையொன்று வைத்திருத்தல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 6. | செயற்கை, இயற்கை தோல் பொருட்கள் உற்பத்தி செய்தல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 7. | பப்படம் உற்பத்தி செய்யும் நிலையம் நடத்தல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 8. | கறுவா எண்ணெய், பெக்கிரி எண்ணெய் உற்பத்தி செய்யும் நிலையம் நடத்தல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 9. | விற்பனைக்காக மனித வலுவைக் கொண்டு கருங்கற்களை உடைக்கும் ஆலை ஒன்று வைத்திருத்தல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 10. | பிளாஸ்டிக் பொருட்கள் விற்பனை செய்யும் நிலையம் ஒன்று வைத்திருத்தல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 11. | ஐஸ் கிறீம் உற்பத்தி நிலையம் ஒன்று வைத்திருத்தல் | 500 0 | 600 0 | 1,000 0 |
| 12. | விற்பனைக்காக காளான் உற்பத்தி நிலையம் ஒன்று பயிரிடல் நடத்துதல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 13. | அமில வாயு பாவனைக்கு எடுக்கும் ஆலையொன்று நடத்தல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 14. | தச்சு ஆலையொன்று நடத்தல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 15. | கற்குழியொன்று நடத்தல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 16. | களியாட்ட நெருப்புப் பொருட்கள் உற்பத்தி செய்யும் நிலையம் நடத்தல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 17. | யோகட் உற்பத்தி நிலையம் நடத்தல் | 500 0 | 600 0 | 1,000 0 |
| 18. | வலு இயந்திர சக்தியால் இறப்பர் தயாரிக்கும் நிலையம் ஒன்று வைத்திருத்தல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 19. | சுண்ணாம்பு ஆலை நடத்தல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 20. | புகையிலை தயாரிக்கும் நிலையம் வைத்திருத்தல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 21. | மிருகப்பண்ணை நடத்தல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 22. | சீமெந்துப் பொருட்கள் உற்பத்தி செய்து விற்பனை செய்யும் நிலையம் நடத்தல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 23. | கோழிப்பண்ணை நடத்தல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 24. | கை இயந்திர சக்தியால் இறப்பர் தயாரிக்கும் புகையடிக்கும் நிலையம் ஒன்று வைத்திருத்தல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 25. | சுருட்டு, பீடி உற்பத்தி செய்யும் நிலையம் நடத்தல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 26. | கொப்பரா உற்பத்தி செய்து களஞ்சியப்படுத்தும் நிலையம் நடத்தல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 27. | மோட்டார் வாகன இலக்கத் தகடு தயாரிக்கும் நிலையம் நடத்தல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 28. | தும்புப் பொருட்கள் உற்பத்தி செய்து களஞ்சியப்படுத்தும் நிலையம் நடாத்தல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 29. | தும்புப் பொருட்கள் மற்றும் நார் வகைகள் உற்பத்தி செய்யும் நிலையம் நடாத்தல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 30. | தேயிலைப் பெட்டி, பலகைப் பெட்டி தயாரிக்கும் நிலையம் நடாத்தல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 31. | வீட்டுப் பொருட்கள் விற்பனை செய்யும் நிலையம் நடாத்தல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 32. | கை இயந்திரத்தினால் பிடவை நெய்யும் நிலையம் நடாத்தல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 33. | மின் இயந்திரத்தினால் பிடவை நெய்யும் நிலையம் நடாத்தல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 34. | பத்தி உற்பத்தி செய்யும் நிலையம் நடத்தல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 35. | தகர வேலைத்தளம் நடத்தல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 36. | துணி அலங்கார அச்சகமொன்று நடத்தல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 37. | இயந்திரங்கள் மூலம் உலோகப் பொருட்கள் உற்பத்தி செய்யும் நிலையம் நடத்தல் | 500 0 | 750 0 | 1,000 0 |

| | I ஆம் நிரல் வியாபார வகைகள் | II ஆம் நிரல் வருடத்துக்குரிய விதிக்கப்பட்ட வியாபார உரிமைக் கட்டணம் | | |
|---|---|---|---|---|
| | | ரூ. 750 இற்கும் குறைந்த வருடாந்தப் பெறுமதிக்கு | ரூ. 751 இல் இருந்து ரூ. 1,500 வரையிலான வருடாந்தப் பெறுமதிக்கு | ரூ. 1,500 இற்கு மேற்பட்ட வருடாந்தப் பெறுமதிக்கு |
| | | ரூபா ச. | ரூபா ச. | ரூபா ச. |
| 38. | உருக்குப் பொருட்கள் உற்பத்தி செய்யும் களஞ்சியப்படுத்தும் நிலையம் நடத்தல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 39. | விற்பனைக்காக பலவகையிலான பயிர் தவான் நடத்தல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 40. | விசித்திர பொருட்கள் உற்பத்தி செய்து விற்பனை செய்யும் நிலையம் நடத்தல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 41. | காகித உறை தயாரித்தல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 42. | தும்பு, கால் துடைப்பு, விளக்குமாறு உற்பத்தி செய்தலும் விற்பனை செய்தலுமான நிலையமொன்று வைத்திருத்தல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 43. | விற்பனைக்காக மண் கரையெடுத்தல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 44. | அமில வகைகள் உற்பத்தி செய்யும் விற்பனை நிலையமொன்று நடாத்தல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 45. | படங்கள் சட்டமிடும் நிலையம் நடத்தல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 46. | பழைய உலோகப் பொருட்கள் ஒன்றுசேர்க்கும் நிலையம் நடத்தல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 47. | தீப்பெட்டி உற்பத்தி செய்யும் நிலையம் நடத்தல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 48. | களியாட்ட பூமிகளில் தற்காலிக வியாபார நிலையம் நடாத்தல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 49. | பட்ரி சார்ஜ் பண்ணும் நிலையம் நடாத்தல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 50. | ஸ்பிறே பெயின்ரிங் நிலையம் நடாத்தல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 51. | பலவித உலோகங்கள் பூசப்படும் நிலையம் நடத்தல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 52. | இறப்பர் புகையடிக்கும் நிலையம் ஒன்று வைத்திருத்தல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 53. | செங்கல் தயாரிக்கும் சூளையிடும் நிலையம் நடத்தல் | 500 0 | 750 0 | 1,000 0 |

10-795/4

---

## பஸ்கொட பிரதேச சபை

வியாபார வரி விதித்தல் - 2015

பஸ்கொட பிரதேச சபையினால் 2014 ஆம் ஆண்டு யூலை மாதம் 22 ஆந் திகதி நடத்தப்பட்ட கூட்டத்தின் தீர்மான இலக்கம் 05 (01) (iii) இன்கீழ் கீழே காட்டப்பட்டுள்ள பிரேரணையை ஏகமனதாக சபை ஏற்றுக்கொண்டதென பொது மக்களுக்கு இத்தால் அறியத்தருகின்றேன்.

மஹிந்த ஈஸ்வரகே,
தலைவர்,
பஸ்கொட பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
பஸ்கொட,
2014, யூலை 22.

### தீர்மானம்

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 152 ஆம் பிரிவுகளின் (அ) (1) ஆம் உட்பிரிவின்படி வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரம் பஸ்கொட பிரதேச சபை வலுப் பிரதேசத்திற்குள் கீழே குறிப்பிடப்பட்டுள்ள அட்டவணையின் நிரல் I இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறான வியாபாரங்கள் தொடர்பாக 2014 ஆம் வருடத்தில் நடத்தப்பட்டு வரும் அனைத்து வியாபாரங்கள் தொடர்பாக அட்டவணையின் நிரல் II இன்படி அனைத்து வியாபாரிகளிடமிருந்தும் ஒவ்வொரு வியாபாரத்துக்குமான வருடாந்த வரியை முன்னைய வருட வருமானத்திலிருந்து 2014 ஆம் ஆண்டு வருமானத்திலிருந்து விதிக்கப்பட்டு அறவிடப்படவும்,

(ஆ) 3 ஆவது உப பிரிவில் வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படி வரிக்குட்பட்ட ஒவ்வொரு நபரிடமிருந்தும் உரிய வரியை 2015 ஆம் ஆண்டின் யூலை மாதத்தின் 1 ஆந் திகதிக்கு முன் பஸ்கொட பிரதேச சபைக்கு செலுத்தப்பட வேண்டுமென பஸ்கொட பிரதேச சபை தீர்மானித்ததாக இத்தால் அறியத்தருகின்றேன்.

| குறிப்பு இல. | I ஆம் நிரல்<br>வருடத்திற்கான வியாபாரத்தின் தன்மை | II ஆம் நிரல்<br>ரூபா ச. |
|---|---|---|
| 1. | ரூபா 6,000 இற்கு மேற்பட்ட சந்தர்ப்பத்தில் | இல்லை |
| 2. | ரூபா 6,001 தொடக்கம் ரூபா 12,000 வரை | 90 0 |
| 3. | ரூபா 12,001 தொடக்கம் ரூபா 18,750 வரை | 180 0 |
| 4. | ரூபா 18,751 தொடக்கம் 75,000 வரை | 360 0 |
| 5. | ரூபா 75,001 தொடக்கம் ரூபா 1,50,000 வரை | 1,200 0 |
| 6. | ரூபா 1,50,001 மேற்பட்ட சந்தர்ப்பத்தில் | 3,000 0 |

1. செங்கல் விற்பனைக்காக களஞ்சியப்படுத்தும் நிலையம் நடாத்தல்
2. ஓடுகள் விற்பனைக்காக களஞ்சியப்படுத்தும் நிலையம் நடாத்தல்
3. விறகு விற்பனை செய்யும் நிலையம் நடாத்தல்
4. வெற்று போத்தல் விற்பனைக்காக களஞ்சியப்படுத்தும் நிலையம் நடாத்தல்
5. வெற்று உறை விற்பனைக்காக களஞ்சியப்படுத்தும் நிலையம் நடாத்தல்
6. குளிர்பானம் 1 குரோசிற்கு கூடுதலாக களஞ்சியப்படுத்தும் நிலையம் நடாத்தல்
7. விற்பனைக்காக சுண்ணாம்பு/ சுண்ணாம்புக் கற்கள் களஞ்சியப்படுத்தும் நிலையம் நடாத்தல்
8. விற்பனைக்காக பத்திரிகை களஞ்சியப்படுத்தும் நிலையம் நடாத்தல்
9. விற்பனைக்காக மிருக உணவு தொன் 1 இற்கு மேல் களஞ்சியப்படுத்தும் நிலையம் நடாத்தல்
10. விற்பனைக்காக இயற்கை பசளை களஞ்சியப்படுத்தும் நிலையம் நடாத்தல்
11. விற்பனைக்காக சீமெந்து களஞ்சியப்படுத்தும் நிலையம் நடாத்தல்
12. வீட்டுத்தளபாடங்கள் விற்பனை செய்யும் நிலையம் நடாத்தல்
13. விற்பனைக்காக தேயிலை 3 அந்தர் களஞ்சியப்படுத்தும் நிலையம் நடாத்தல்
14. கணினிகளும் கணினி உதிரிப்பாகங்களும் விற்பனை செய்யும் நிலையம் நடாத்தல்
15. கொமினிகேசன் தொலைபேசிச் சேவை பெற்றுக்கொள்ளும் நிலையம் நடாத்தல்
16. வாழைக்குலை/பாக்கு சேர்க்கும் நிலையம் நடாத்தல்
17. பூஜைப் பொருட்கள் விற்பனை செய்யும் நிலையம் நடாத்தல்
18. தலைக்கு பூசும் எண்ணெய் விற்பனை செய்யும் நிலையம் நடாத்தல்
19. உடற்பயிற்சி செய்யும் நிலையம் நடாத்தல்
20. உபதேச சேவை வழங்கும் நிலையம் நடாத்தல்
21. சாப்புச் சாமான்கள் விற்பனை செய்யும் நிலையம் நடாத்தல்
22. மின்சார உபகரணம் விற்பனை செய்யும் நிலையம் நடாத்தல்
23. ஒலிபெருக்கி குத்தகைக்கு விடும் நிலையம் நடாத்தல்
24. தொலைக்காட்சி/ தொலைபேசி/ தையல் இயந்திரம்/ மிதிவண்டிகள் விற்பனை செய்யும் நிலையம் நடாத்தல்
25. ஆடைகள் விற்பனை செய்யும் நிலையம் நடாத்தல்
26. தோல் பொருட்கள் விற்பனை செய்யும் நிலையம் நடாத்தல்
27. அலுமினியம், பிளாஸ்டிக் பொருட்கள் விற்பனை செய்யும் நிலையம் நடாத்தல்
28. கொண்டாட்டப் பொருட்கள் விற்பனை செய்யும் நிலையம் நடாத்தல்
29. தையல் இயந்திர முகாமை நிறுவனம் நடாத்தல்
30. புத்தகக் கடை வைத்திருத்தல்
31. மோட்டார் வாகன/மோட்டார் சைக்கிள்/டிரக்டர்/பைசிக்கள் உதிரிப்பாகங்கள் விற்பனை செய்யும் நிலையம் ஒன்று நடாத்தல்
32. காகிதாதிகள் விற்பனை செய்யும் நிலையம் நடாத்தல்
33. கண்ணாடி கண்ணாடிப் பொருட்கள் விற்பனை செய்யும் நிலையம் நடாத்தல்
34. ஆயுர்வேத வைத்தியம் மருந்து விற்பனை நிலையம் நடாத்தல்
35. மேற்கத்திய வைத்தியம் மருந்து விற்பனை நிலையம் நடாத்தல்
36. ஆயுர்வேத வைத்தியம் பார்க்கும் நிலையம் நடாத்தல்
37. மேற்கத்திய வைத்தியம் பார்க்கும் நிலையம் நடாத்தல்
38. மட்பாண்டங்கள் உற்பத்தி செய்யும் நிலையம் நடாத்தல்
39. மலர்ச்சாலை பொருட்கள் உற்பத்தி செய்து விற்பனை செய்யும் நிலையம் நடாத்தல்
40. வெற்றிலை விற்பனை செய்யும் நிலையம் நடாத்தல்
41. தைத்த ஆடைகள் விற்பனை செய்யும் நிலையம் நடாத்தல்
42. மோட்டார் வாகன/மோட்டார் சைக்கிள்/டிரக்டர்/பைசிக்கள் விற்பனை செய்யும் நிலையமொன்று நடாத்தல்
43. படப்பிரதி செய்யும் நிலையம் நடாத்தல்
44. விளையாட்டுப் பொருட்கள் விற்பனை செய்யும் நிலையம் நடாத்தல்
45. நாடாக்கள் பதிவுசெய்தல் வில்லைகள், பதிவுசெய்தல் நிலையம் நடாத்தல்
46. சங்கீதம் பதிவுசெய்தல், ரெகோட் பார் நிலையம் நடாத்தல்
47. லொத்தர் சீட்டிழுப்பு நிலையமொன்று நடாத்தல்
48. கணினி பயிற்சி நிலையமொன்றை நடாத்தல்
49. விற்பனைக்காக தென்னோலை களஞ்சியப்படுத்தும் நிலையம் நடாத்துதல்
50. வெளிநாட்டு தொழில் வாய்ப்பு முகாமை நிலையம் நடாத்தல்
51. தேயிலைக் கொழுந்துகளை களஞ்சியப்படுத்தும் நிலைய மொன்று நடாத்தல்
52. ஜுக்கி மெசின் பயிற்சி நிலையமொன்று நடாத்தல்
53. சஞ்சிகைகள் விற்பனை செய்யும் நிலையம் நடாத்தல்
54. திரைப்படங்கள் காட்டப்படும் நிலையமொன்று நடாத்தல்
55. திரைப்படச் சாலை நடாத்துதல்
56. அனுமதிக்கப்பட்ட ரேஸ் பந்தய நிலையம் நடாத்தல்
57. இரும்புச் சாமான்கள் /நீர்க்குழாய்/பித்தளை உபகரணங்கள் விற்பனை செய்யும் நிலையமொன்று நடாத்துதல்
58. கறுவா/ மிளகாய் /இறப்பர் ஏனைய தேசிய பொருட்கள் கொள்வனவு செய்யும் விற்பனை செய்யும் நிலையம் நடாத்தல்
59. பராலை கிழிக்கப்பட்ட மரப்பலகைகள் விற்பனை செய்யும் நிலையமொன்று நடாத்துதல்
60. மேசைப் பந்து விளையாட்டு நிலையம் நடாத்தல்
61. மின்சார உற்பத்தி இயந்திரம், மின்சார உபகரணம் குத்தகைக்கு விடும் நிலையமொன்று நடாத்துதல்
62. பீங்கான் பொருட்கள் விற்பனை செய்யும் நிலையமொன்று நடாத்துதல்

63. மொத்த விற்பனை நிலையமும் சிகரட் களஞ்சியப்படுத்தும் நிலையமும் நடாத்தல்
64. சீமெந்து பொருட்கள், கொங்கிரீட் பொருட்கள் விற்பனை செய்யும் நிலையமொன்று நடாத்துதல்
65. பிளாஸ்டிக் பொருட்கள், பெயர்ப்பலகை விற்பனை செய்யும் நிலையமொன்று நடாத்துதல்
66. சில்லறைச் சாமான்கள் விற்பனை செய்யும் நிலையமொன்று நடாத்துதல்
67. செல்லப் பிராணிகள் விற்பனை செய்யும் நிலையமொன்று நடாத்துதல்
68. டயர், டியூப் களஞ்சியப்படுத்தும் விற்பனை செய்யும் நிலையமொன்று நடாத்துதல்
69. கையடக்கத் தொலைபேசி விற்பனை நிலையமொன்று நடாத்துதல்
70. மோட்டார் வாகனம் விற்பனை செய்யும் நிலையமொன்று நடாத்துதல்
71. மாணிக்கக் கற்கள் ஒப்பமிடும் நிலையமொன்று நடாத்துதல்
72. வைத்தியர்கள் சேவை புரியும் நிலையமொன்று நடாத்துதல்
73. தொலைபேசி முற்பண கார்ட் விற்பனை செய்யும் நிலையமொன்று நடாத்துதல்
74. சாயம் விற்பனை செய்யும் நிலையமொன்று நடாத்துதல்
75. வெளிநாட்டு உல்லாச முகாமை நிறுவனம் நடாத்தல்
76. கட்டிடப் பொருட்கள் விற்பனை செய்யும் நிலையமொன்று நடாத்துதல்
77. நிதி நிறுவனமொன்று நடாத்தல்
78. விற்பனைக்காக தீப்பெட்டி குரோஸ் 1 இற்கு மேல் களஞ்சியப்படுத்தல்
79. சுருட்டு/பீடி விற்பனை செய்யும் நிலையமொன்று நடாத்துதல்
80. பாதணிகள் விற்பனை செய்யும் நிலையமொன்று நடாத்துதல்
81. ஆபரணங்கள் விற்பனை செய்யும் நிலையமொன்று நடாத்துதல்
82. கல், மண், செங்கல் களஞ்சியப்படுத்தி விற்பனை செய்யும் நிலையமொன்று நடாத்துதல்
83. காப்புறுதிச் சேவை முகாமை நிறுவனம் நடாத்தல்
84. வைத்திய இரசாயன அறை நடாத்தல்
85. மதுபானம், பியர் விற்பனை செய்யும் நிலையமொன்று நடாத்துதல்
86. பசளை விற்பனை செய்யும் நிலையமொன்று நடாத்துதல்
87. ஓடுகள் உற்பத்தி செய்யும் நிலையமொன்று நடாத்துதல்
88. கை இயக்க அச்சகம் நடாத்தல்
89. இயந்திர இயக்க அச்சகம் நடாத்தல்
90. அசிட் விற்பனை செய்யும் நிலையமொன்று நடாத்துதல்
91. விவசாய இரசாயனப் பொருட்கள் விற்பனை செய்யும் நிலையமொன்று நடாத்துதல்
92. தீ வேடிக்கைப் பொருட்கள் விற்பனை செய்யும் நிலையமொன்று நடாத்துதல்
93. கேஸ் களஞ்சியப்படுத்தி விற்பனை செய்யும் நிலையமொன்று நடாத்துதல்
94. விவசாய இரசாயன பொருட்கள் களஞ்சியப்படுத்தும் நிலையமொன்று நடாத்துதல்
95. மின் ஒளிபரப்புக் கோபுரம் நடாத்தல்
96. உராய்வு நீக்கிகள் நிரப்பும் நிலையம் நடாத்தல்
97. தேயிலைக் கைத்தொழில் நிலையம் நடாத்தல்
98. தொகுதி வியாபார நிலையம் நடாத்தல்
99. சோதிட சேவை நிலையம் நடாத்தல்
100. கட்டட நிர்மாண நிலையம் நடாத்தல்
101. மர ஆலை நடாத்தல்
102. கற்குழி நடாத்தல்
103. சேவையாளர்கள் 25 இற்கு மேல் உள்ள புடவைக் கைத்தொழிலகம் நடாத்தல்
104. குளிர்பானம் விற்பனை செய்யும் நிலையமொன்று நடாத்துதல்
105. பால்மா, அடைக்கப்பட்ட உணவுகள் விற்பனை செய்யும், களஞ்சியப்படுத்தும் நிலையம் நடாத்தல்
106. டயர், டியூப் விற்பனை செய்யும் நிலையமொன்று நடாத்துதல்
107. பீங்கான் கடோல் குளியலறைத் தொகுதி விற்பனை நிலையம் நடத்தல்
108. அமைப்பு முயற்சிகள் நடத்தும் நிறுவனம் நடத்தல்
109. விசித்திர பொருட்கள் விற்பனை செய்யும் நிலையம் நடாத்தல்
110. விசித்திர ஆபரணங்கள் விற்பனை நடத்தும் நிலையம் நடாத்தல்
111. திரைப்பிடவை தைத்தல்
112. முகாமை தபால் அலுவலகம் நடாத்தல்
113. கையடக்கத் தொலைபேசி உதிரிப்பாகங்கள் விற்கும் நிலையம் நடாத்தல்
114. சிறுவர் உடை மற்றும் உபகரணங்கள் விற்பனை செய்யும் நிலையம் நடாத்தல்
115. வாகனங்களினால் வெளியேறும் புகை பரிசோதனை நிலையம் நடத்தல்
116. வீதி அமைப்புக்களுக்கான கொங்கிரீட் கற்கள் உற்பத்தி செய்யும் நிலையம் நடத்தல்
117. மரணச்சடங்கு வேலை நடத்தும் நிலையம் நடத்தல்
118. மோட்டார் வாகனம் (சர்விஸ்) செய்யும் நிலையம் நடத்தல்
119. மிளகாய், உப்பு வேறு அழுக்கடையும் உணவு வகைகள் விற்பனை செய்யும் நிலையம் நடத்தல்
120. குடிநீர் போத்தல்களுக்கு அடைத்து விற்கும் நிலையம் நடத்தல்
121. சரக்குப் பொருட்கள், அரிசி, சீனி, பால்மா சில்லறை விற்பனை நிலையம் நடத்தல்
122. சரக்குப் பொருட்கள், அரிசி, சீனி, பால்மா மொத்த விற்பனை நிலையம் நடத்தல்
123. சாரதி பயிற்சி நிலையம் நடத்தல்
124. தனியார் கல்வி நிலையமொன்று நடத்தல்
125. விற்பனைக்காக உணவுப் பொருட்கள் பக்கட் பண்ணும் நிலையம் நடத்தல்
126. அரிசி ஆலையொன்று வைத்திருத்தல்
127. இயந்திரங்கள் மூலம் சரக்கு வகைகள்/தானிய வகைகள்/மா/மிளகாய்த்தூள் குத்தும் ஆலையொன்று வைத்திருத்தல்
128. தேயிலைப் பக்கட் பண்ணும் நிலையம் நடத்தல்
129. வேல்டின் வேலைத்தளம் நடத்தல்

130. சரக்கு வகைகள்/தானிய வகைகள்/மா/மிளகாய்த்தூள் குத்தும் ஆலையொன்று வைத்திருத்தல்
131. குளிரூட்டப்பட்ட மீன்/இறைச்சி விற்பனை செய்யும் நிலையம் நடத்தல்
132. தேங்காய் எண்ணெய் ஆலையொன்று வைத்திருத்தல்
133. கொங்கிரீட் கற்கள் உற்பத்தி செய்யும் நிலையமொன்று வைத்திருத்தல்
134. தச்சு வேலை தொடர்பாக உருக்கு ஆலையொன்று நடத்தல்
135. பல் பிடுங்கும் நிரப்பும் வைத்திய நிலையம் நடத்தல்
136. மோட்டார் வண்டி, முச்சக்கர வண்டி சர்விஸ் பார்க்கும் நிலையம் ஒன்று வைத்திருத்தல்
137. பழங்கள் விற்பனை செய்யும் நிலையமொன்றை வைத்திருத்தல்
138. குளிரூட்டப்பட்ட யோகட் குடிபானங்கள், ஐஸ் கிறீம் பக்கட் உற்பத்தி செய்யும் நிலையம் ஒன்று வைத்திருத்தல்
139. மரக்கறி விற்பனை செய்யும் நிலையமொன்றை வைத்திருத்தல்
140. மிளகாய், உப்பு, வேறு அழுக்கடையக்கூடிய சில்லறைச் சாமான்கள் சில்லறையாக விற்பனை செய்யும் நிலையமொன்றை வைத்திருத்தல்
141. நடமாடும் பேக்கரி பொருட்கள் சில்லறையாக விற்பனை செய்யும் நிலையம் நடத்தல்
142. பலவகையான இயந்திரங்கள் பாவனைக்கு கொண்ட தச்சு வேலைத்தளமொன்று நடத்தல்
143. மிதிவண்டி பழுதுபார்க்கும் நிலையமொன்று வைத்திருத்தல்
144. மோட்டார் வண்டி, முச்சக்கர வண்டி, கைஇயந்திர வண்டி பழுதுபார்க்கும் நிலையம் ஒன்று வைத்திருத்தல்
145. டயர், டியூப் வோல்கனைஸ் பண்ணும் நிலையம் நடத்தல்
146. தங்க நகைகள் உற்பத்தி செய்யும் நிலையம் நடத்தல்
147. படப்பிடிப்பு படப்பிரதி நிலையம் நடத்தல்
148. ஒலிபெருக்கி, தொலைக்காட்சி, தையல் இயந்திரம் அனைத்து மின்சார உபகரணங்களும் பழுதுபார்க்கும் நிலையமொன்று நடாத்தல்
149. கைக்கடிகாரங்கள் பழுதுபார்க்கும் நிலையமொன்று நடாத்தல்
150. சப்பாத்து, குடை பழுதுபார்க்கும் நிலையம் நடாத்தல்
151. குசன் வேலைத்தளம் நடத்தல்
152. சரக்கு வகைகள்/தானிய வகைகள்/மா/மிளகாய்த்தூள் பக்கட் செய்து விற்பனை செய்யும் நிலையம் வைத்திருத்தல்
153. கிரில் கேட், இரும்பு, உருக்கு பூவெட்டும் நிலையமொன்று வைத்திருத்தல்
154. சிகை அலங்கார நிலையம் நடத்தல்
155. முச்சக்கர வண்டிகளின் உதிரிப்பாகங்கள் விற்பனை செய்யும் நிலையமொன்று நடத்தல்
156. பெயர்ப்பலகை/அறிவித்தல் பலகை/தயார் செய்யும் நிலையம் நடத்தல்
157. கையடக்கத் தொலைபேசி பழுதுபார்க்கும் நிலையம் நடத்தல்
158. தங்கம், வெள்ளி உலோகப் பொருட்கள் பூசப்படும் நிலையம் நடத்தல்
159. குளிரூட்டி, அதிகுளிரூட்டி மற்றும் வாயு சமநிலைப்படுத்தல் பழுதுபார்க்கும் நிலையம் நடத்தல்
160. மோட்டார் வாகன மின்சார கைத்தொழில் நிலையம் நடத்தல்
161. உடைகள் தைக்கும் நிலையம் நடத்தல்
162. மோட்டார் வாகனம் பழுதுபார்க்கும் நிலையம் நடத்தல்
163. உருக்கு ஆலை நடத்தல்
164. வாகனங்களின் அதிகுளிரூட்டித் தொகுதிகளை பழுது பார்க்கும் நிலையம் நடத்தல்
165. தனியார் முன்பள்ளி மற்றும் குழந்தை பராமரிப்பு நிலையம் நடத்துதல்

10-795/5

---

**பஸ்கொட பிரதேச சபை**

*ஏக்கர் வரி அறிவிடுதல் - 2015*

பஸ்கொட பிரதேச சபையினால் 2014 ஆம் ஆண்டு யூலை மாதம் 22 ஆந் திகதி நடத்தப்பட்ட கூட்டத்தின் தீர்மான இலக்கம் 05 (01) (iv) இன்கீழ் கீழே காட்டப்பட்டுள்ள பிரேரணையை ஏகமனதாக சபை ஏற்றுக் கொண்டதென பொது மக்களுக்கு இதன் மூலம் அறியத்தருகின்றேன்.

மஹிந்த ஈஸ்வரகே,
தலைவர்,
பஸ்கொட பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
பஸ்கொட,
2014, யூலை 22.

**தீர்மானங்கள்**

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின்கீழ்-

(அ) 146 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்படி வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரம் பஸ்கொட பிரதேச சபை வலுப் பிரதேசத்தில் அமைந்துள்ள ஏக்கர் வரிக்கு உட்பட்ட அனைத்து காணிகளுக்கும் 2014 ஆம் ஆண்டில் மதிப்பிட்டு உத்தரவாத மளிக்கப்பட்ட தொகையை 2015 ஆம் வருடத்தினதும் மதிப்பீடாக கணித்து ஏற்றுக்கொள்ளவும்,

(ஆ) 134 ஆம் பிரிவின் (3) ஆம் உப பிரிவின் பிரகாரம் அதன் உப பிரிவின் முதலாம் துணைவிதியின்கீழ் 1989.08.10 ஆந் திகதிய வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட நியதியின்கீழ் ஏக்கர் வரி விதித்தல் மற்றும் அறவிடல் போன்ற செயற்பாடுகள் உள்ளூராட்சி அமைச்சர் அவர்களினால் விசேட பிரதேசங்கள் என விதிக்கப்பட்ட காணிகளில் ஹெக்டயார் ஐந்துக்கு (05) குறைந்த ஹெக்டயார் (01) ஒன்றிற்கு குறையாத சந்தர்ப்பத்தில் ரூபா 50.00 ஆகவும் ஹெக்டயார் ஐந்துக்கு அதிகரிக்கப்படும் ஒவ்வொரு ஹெக்டயார் காணிக்கும் ரூபா 10.00 தொகையுமான ஏக்கர் வரியை 2015 ஆம் ஆண்டிற்கென விதித்து அறவீடு செய்யவும்,

(இ) 134 ஆம் பிரிவின் (6) ஆம் உப பிரிவின்கீழ் வழங்கப்பட்டுள்ள உத்தரவாதத்தின்கீழ் மேற்குறித்த வரியை 2015 ஆம் ஆண்டின் மாச்சு 31, யூன் 30, செத்தெம்பர் 30, திசெம்பர் 31 ஆந் திகதிகளில் அல்லது அதற்கு முன்னதான காலாண்டுகளில் நான்கு தடவைகளாக பஸ்கொட பிரதேச சபைக்கு வழங்கப்பட வேண்டுமென வரிக்கு உட்பட்ட அனைவராலும் இதன் மூலம் அறியத்தருகின்றேன்.

10-795/6

---

**பஸ்கொட பிரதேச சபை**

*களியாட்ட வரிக் கட்டளைச் சட்டத்தின்கீழ் உத்தரவுப்பத்திரக் கட்டணம் அறவிடல் - 2015*

(267 ஆம் அத்தியாயம்) களியாட்ட வரிக் கட்டளைச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் மூலம் அளிக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பயனைக் கொண்டு மாத்தறை மாவட்டத்தின் பஸ்கொட பிரதேச சபையினால் 2012.03.01 ஆந் திகதி நடத்தப்பட்ட சபைக் கூட்டத்தில் சம்மதிக்கப்பட்ட பின்வரும் பிரேரணையானது, 1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க பிரிவின்படி மாகாண சபைகளுக்குரிய துணைவிதியின் (2) ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவினால் வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படி தென் மாகாண, மாகாண சபை உள்ளூராட்சி அமைச்சர் கௌரவ சான் விஜயலால் த சில்வா அவர்களினால் அனுமதிக்கப்பட்டுள்ளதென இத்தால் அறியத்தருகின்றேன்.

இதன்படி பஸ்கொட பிரதேச சபையினால் 2014 ஆம் வருடத்தின் யூலை மாதம் 22 ஆந் திகதி நடத்தப்பட்ட கூட்டத்தின் தீர்மான இலக்கம் 05 (01) (vii) இன்கீழ் கீழே காட்டப்பட்டுள்ள பிரேரணையை ஏகமனதாக சபை ஏற்றுக்கொண்டதென பொது மக்களுக்கு இதன் மூலம் அறியத்தருகின்றேன்.

மஹிந்த ஈஸ்வரகே,
தலைவர்,
பஸ்கொட பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
பஸ்கொட,
2014, யூலை 22.

**தீர்மானங்கள்**

(267 ஆம் அத்தியாயம்) களியாட்ட வரிக் கட்டளைச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் மூலம் அளிக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பயனைக் கொண்டு பஸ்கொட பிரதேச சபையின் நிர்வாக எல்லைக்குட்பட்ட பிரதேசத்தில் நடாத்தப்படுகின்ற அனைத்து களியாட்டங்களுக்கும்–

(அ) திரைப்படமொன்று பார்வையிடுவதற்காக உட்பிரவேசிப்படும் நபர்களினால் செலுத்தப்படும் கட்டணத்தில் நூற்றுக்கு ஏழு தசம் ஐந்து வீத (7.5%) தொகையையும் மற்றும்

(ஆ) வேறு களியாட்ட நடவடிக்கைகளுக்கு பார்வையிடுவதற்காக உட்பிரவேசிக்கப்படும் நபர்களினால் செலுத்தப்படும் கட்டணத்தில் நூற்றுக்கு பத்து சதவீதத்தையும் (10%)

மேற்குறித்த களியாட்ட வரிக் கட்டளைச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின்படி உள்ளூராட்சி நிருவாக நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படி களியாட்ட வரியை விதித்து அறவிடப்படவும், இவ்வாறான களியாட்ட வரியை பஸ்கொட பிரதேச சபைக்கு வழங்கப்பட வேண்டுமெனவும் தீர்மானித்துள்ளது.

10-795/2

---

**பஸ்கொட பிரதேச சபை**

*கழிவகற்றல் சேவைக் கட்டணம் அறவிடல் - 2015*

பஸ்கொட பிரதேச சபையினால் 2014 ஆம் வருடத்தின் யூலை மாதம் 22 ஆந் திகதி நடத்தப்பட்ட கூட்டத்தின் தீர்மான இலக்கம் 05 (01) (v) இன்கீழ் கீழே காட்டப்பட்டுள்ள பிரேரணையை ஏகமனதாக சபை ஏற்றுக்கொண்டதென பொது மக்களுக்கு இத்தால் அறியத் தருகின்றேன்.

மஹிந்த ஈஸ்வரகே,
தலைவர்,
பஸ்கொட பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
பஸ்கொட,
2014, யூலை 22.

**தீர்மானங்கள்**

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 122 ஆவது பிரிவின் மற்றும் 126 (ix) ஆ பிரிவின் பிரகாரம் கிடைக்கப்பட்ட அதிகாரத்தின்படி பஸ்கொட பிரதேச சபையினால் 2009.07.27 ஆந் திகதி ஏற்றுக்கொள்ளப்பட்ட 1988.08.23 ஆந் திகதிய 250/7 ஆம் இலக்க பொது துணைவிதியின் (09) ஆவது பிரிவின்படி கழிவகற்றல் சேவை மூலம் சேவை வழங்கப்படும் ஏதாவது நிலையத்தின் வதிவாளர்/வியாபாரி என்பவருக்கு கீழே குறிப்பிடப்பட்ட விதத்தில் கழிவகற்றல் கட்டணமொன்று பஸ்கொட பிரதேச சபைக்கு 2015 ஆம் வருடத்தின் சனவரி மாதம் தொடக்கம் அறவிடப்பட பஸ்கொட பிரதேச சபை தீர்மானித்துள்ளதாக இத்தால் அறியத்தருகின்றேன்.

**அட்டவணை**

| | ரூபா ச. |
|---|---|
| சர்விஸ் சென்டர்/கராஜ் ஒன்றிற்காக | 200 0 |
| ஹோட்டல்/சிற்றுண்டிச்சாலை | 200 0 |
| பழங்கள்/மரக்கறிக்கடை | 150 0 |
| வேறு வியாபாரங்களுக்கு | 100 0 |
| வீடுகளுக்கு | 50 0 |

10-795/8

## பஸ்கொட பிரதேச சபை

விளம்பரங்களுக்கான அறிவித்தல்/கட்புலனாகும் சூழல் வரி அறவிடல் - 2015

பஸ்கொட பிரதேச சபையினால் 2014 ஆம் ஆண்டு யூலை மாதம் 22 ஆந் திகதி நடத்தப்பட்ட கூட்டத்தின் தீர்மான இலக்கம் 05.01 (vi) இன்கீழ், கீழே காட்டப்பட்டுள்ள பிரேரணையை ஏகமனதாக சபை ஏற்றுக்கொண்டதென பொது மக்களுக்கு இத்தால் அறியத்தருகின்றேன்.

மஹிந்த ஈஸ்வரகே,
தலைவர்,
பஸ்கொட பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
பஸ்கொட,
2014, யூலை 22.

### தீர்மானங்கள்

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் மற்றும் 149 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய இச்சட்டத்தின் 147 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (அ) பிரிவின்கீழ் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின்படி பிரதேச சபை சட்டத்தின்கீழ் தயாரிக்கப்பட்ட 1988.08.23 ஆந் திகதிய 520/7 ஆம் இலக்க உள்ளூராட்சி அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும் உரித்துடைய துணைவிதியை 2009.07.27 ஆந் திகதி சபை ஏற்றுக்கொண்டதோடு, இத்துணைவிதிகளில் ஏற்றுக்கொண்ட இடையாப்பு 39 ஆம் பிரிவின் பிரகாரம் பஸ்கொட பிரதேச சபை எல்லைக்குள் யாராவது ஒரு நபரினால் ஏதாவது ஒரு விதத்தில் பாதைகளுக்கு, ஓடைகளுக்கு, குளங்களுக்கு அல்லது ஆகாயத்திற்கு தென்படும் விதத்தில் விளம்பர அறிவித்தல்களுக்காக கீழே அட்டவணையில் காட்டப்பட்டுள்ள தொகைகளின் I ஆம் நிரலில் உள்ள விளம்பரங்களுக்கு II ஆம் நிரலில் உள்ள கட்டணங்களை 2015 ஆம் ஆண்டுக்கு விதித்து அறவிடப்படவென பஸ்கொட பிரதேச சபை தீர்மானித்துள்ளது.

### அட்டவணை

| தொடர் இல. | I ஆம் நிரல் | II ஆம் நிரல் சதுர அடிக்கு ரூபா ச. |
|---|---|---|
| 1. | விளம்பரப்படுத்தப்படும் அறிவித்தல் பலகைகளுக்கு | 30 0 |
| 2. | விளம்பரப்படுத்தப்படும் பெனர் மற்றும் கட்டவுட் அறிவித்தல் ஒன்றிற்கு | 25 0 |
| 3. | டிஜிடல் மற்றும் எல். ஈ டி மின்குமிழிகளினால் செயலாற்றப்படும் விளம்பரப்பலகைகளின் ஒரு வியாபார விளம்பரத்திற்கு ஒரு நாளைக்கு | 10 0 |

10-795/3

---

## பஸ்கொட பிரதேச சபை

வேறு கட்டணங்கள் அறவிடல் - 2015

பஸ்கொட பிரதேச சபையினால் 2014 ஆம் ஆண்டு யூலை மாதம் 22 ஆந் திகதி நடத்தப்பட்ட கூட்டத்தின் தீர்மான இலக்கம் 05 (01) (viii) இன்கீழ், கீழே காட்டப்பட்டுள்ள பிரேரணையை ஏகமனதாக சபை ஏற்றுக்கொண்டதென பொது மக்களுக்கு இத்தால் அறியத்தருகின்றேன்.

மஹிந்த ஈஸ்வரகே,
தலைவர்,
பஸ்கொட பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
பஸ்கொட,
2014, யூலை 22.

**தீர்மானங்கள்**

*1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின்கீழ், பிரதேச சபைகளுக்கு உள்ள அதிகாரத்தின் பிரகாரம் பஸ்கொட பிரதேச சபையினால் கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்ட கட்டணங்களை 2015 ஆம் ஆண்டிற்கென விதித்து அறவிட பஸ்கொட பிரதேச சபை தீர்மானித்துள்ளது.*

**அட்டவணை**

| தொடர் இல. | வியாபாரத்தின் தன்மை | அறவிடப்படும் தொகை ரூபா ச. |
|---|---|---|
| 1. | ஏ. ரீ. விண்ணப்பக் கட்டணம் ஒப்பினை சாராம்சம் விண்ணப்பத்தின் தன்மை | 250 0 |
| 2. | கட்டட விண்ணப்பக் கட்டணம்- | |
| | (1) நகர வலுப் பிரதேசத்தில் | 400 0 |
| | (2) நகர வலுப் பிரதேசத்தின் வெளியே | 300 0 |
| 3. | விபத்திற்குட்பட்ட மரங்களை அகற்றும் விண்ணப்பக் கட்டணம்- | |
| | (1) பலாமரத்திற்கு | 500 0 |
| | (2) வேறு மரங்களுக்கு | 350 0 |
| 4. | கட்டட அனுமதிப்பத்திரம் ஒன்றின் திருப்திகரமானது எனக் கூறப்படும் சான்றிதழ் | |
| | வியாபார நிலையத்திற்கு/வதிவிடத்திற்கு மீற்றர் 400 | 600 0 |
| | அதிகரிக்கப்படும் அனைத்து மீற்றர்களுக்குமாக | 50 0 |
| 5. | வீதி ரேகா (நகர எல்லை) மற்றும் எடுத்துக்கொள்ளப்படாத சான்றிதழ் ஒன்றிற்கு- | |
| | விண்ணப்பப்பத்திரக் கட்டணம் | 50 0 |
| | வீதி ரேகா மற்றும் எடுத்துக்கொள்ளப்படாத சான்றிதழ் ஒன்றிற்கு கட்டணம் | 450 0 |
| 6. | சபையின் வீதிகள் பழுதுபடுத்துவதற்கான கட்டணம் | 1,500 0 |
| 7. | சுற்றாடல் பாதுகாப்பு உத்தரவுப்பத்திரக் கட்டணம்- | |
| | (1) கேள்விக் கட்டணம் | 300 0 |
| | (2) விண்ணப்பப்பத்திரக் கட்டணம் | 350 0 |
| 8. | காணி துண்டாக்கல் விண்ணப்பக் கட்டணம் | 300 0 |
| 9. | பிரதேச சபைக்குரிய பொதுக் காணிகள் கூட்டங்களுக்கு மற்றும் வேறு முயற்சிகளுக்கு குத்தகைக்கு விட ஒரு நாளைக்கு | 1,000 0 |
| 10. | வாசிகசாலை கட்டணம்- | |
| | (1) விண்ணப்பப்பத்திரக் கட்டணம் | 50 0 |
| | (2) பிணை வைப்புக் கட்டணம் | 250 0 |
| | (3) அங்கத்துவரினால் பெற்றுக்கொண்ட புத்தகம் ஒன்று காணாமல் போனவிடத்து, புத்தகத்தின் பெறுமதியில் இரண்டு பங்கு அறவிடப்பட வேண்டும் | |
| 11. | எல்லை மதில் அமைப்பதற்கு முற்பண கட்டணம்- | |
| | (1) முதலாவது 100 மீற்றருக்கு | 1,000 0 |
| | (2) அதிகரிக்கப்படும் அனைத்து ஒவ்வொரு மீற்றருக்கும் | 10 0 |

10-795/7

---

**மினிப்பே பிரதேச சபை**

வியாபாரம் மற்றும் தொழில் தொடர்பான வரி விதித்தல் - 2015

*2014, ஓகத்து மாதம் 22 ஆம் திகதி நடைபெற்ற மினிப்பே பிரதேச சபையின் பொதுக் கூட்டத்தில் தீர்மான இலக்கம் 6-1 இன்கீழ் பின்வரும் பிரேரணை நிறைவேற்றப்பட்டுள்ளதென இத்தால் பொதுமக்களுக்கு அறிவிக்கப்படுகின்றது.*

*2015 ஆம் ஆண்டிற்கென விதிக்கப்படும் குறித்த வியாபாரம் மற்றும் தொழில் தொடர்பான வரியை அந்த வருடத்தின் ஏப்பிரல் மாதம் 30 ஆந் திகதிக்கு முன்னர் பிரதேச சபை அலுவலகத்தில் செலுத்திவிடுமாறு மேலும் அறிவிக்கப்படுகின்றது.*

டபிள்யூ. ஏ. வசந்த ஜயசுந்தர
தலைவர்,
மினிப்பே பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
மினிப்பே,
2014, செத்தெம்பர் 09.

### தீர்மானம்

*1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 152ஆவது பிரிவின் (1) ஆவது உப பிரிவின்படி பிரதேச சபைகளுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் கீழ், குறித்த சட்டத்தினால் அல்லது ஏற்றுக்கொள்ளப்பட்ட ஏதாவது துணை விதியின் கீழ் அல்லது குறித்த சட்டத்தின் 150 ஆவது பிரிவின்படி அனுமதிப்பத்திரம் ஒன்றைப் பெறவோஅல்லது வரிக் கொடுப்பனவு செய்யத் தேவையில்லாத வர்த்தகங்கள் அல்லது தொழில் தொடர்பாக, மினிப்பே பிரதேச சபையின் நிருவாக எல்லைக்குள் 2015 ஆம் ஆண்டில் நடத்திச் செல்லும் ஒவ்வொருவரும் குறித்த வர்த்தகத்தில் அதற்கு முன்னைய வருடத்தின் பெறுகைகளின் மீது பின்வரும் அட்டவணையின் நிரல் I இல் காட்டப்பட்டுள்ள எல்லைக்குள் நடத்திச் செல்லப்படும் சந்தர்ப்பத்தில் அதன் நிரல் II இல் குறிப்பிடப்பட்டுள்ள தொகைக்குச் சமமாக வியாபார வரியொன்றை 2015 ஆம் ஆண்டுக்கென விதித்து அறவிடுவதற்கும், குறித்த வரிக்கு உட்படுபவர் அவ்வரியை 2015 ஆம் வருடம் ஏப்பிறல் மாதம் 30 ஆந் திகதிக்கு முன்னர் மினிப்பே பிரதேச சபையின் அலுவலகத்தில் செலுத்திவிடுமாறு மினிப்பே பிரதேச சபை தீர்மானிக்கின்றது.*

### அட்டவணை I

1. ஈடுபிடிக்கும் நிலையம் நடத்துதல்
2. ஏலதாரராகவோ தரகராகவோ செயற்படுதல்
3. பிரசித்த நில அளவையாளராகவோ அல்லது போக்குவரத்து பிரதிநிதியாகவோ செயற்படுதல்
4. வாகனத் தரிப்பிடம் நடத்துதல்
5. கட்டட வரைபடக் கலைஞராகச் செயல்படல்
6. பதிவுபெற்ற ஒப்பந்தக்காரராகச் செயற்படுதல்
7. காப்புறுதி அலுவலராகச் செயற்படுதல்
8. வழங்குநராகச் செயற்படுதல்
9. தனியார் மருத்துவ நிலையம் நடத்துதல்
10. தனியார் கல்வி நிலையம் நடத்துதல்
11. வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்கள் நடத்துதல்
12. வெளிநாட்டுத் தொழில் முகவர் நிலையம் நடத்துதல்
13. பிரதிநிதி நிறுவனமாகச் செயற்படுதல்
14. சாரதி பயிற்சிப் பாடசாலை நடத்துதல்
15. மணல் துறையொன்றை நடத்துதல்
16. வாகன விற்பனை நிலையம் நடத்துதல்
17. கணினி விற்பனை நிலையம் நடத்துதல்
18. செங்கல், மணல் களஞ்சியமும் விற்பனையும் நடத்துதல்
19. தங்க நகைகள் தயாரிக்கும் அல்லது விற்கும் நிலையம் நடத்துதல்
20. செங்கல் உற்பத்தியும் விற்பனையும்
21. இரத்தினக் கல் அகழும் ஒரு சுரங்கத்திற்கு
22. திரவ வாயு விற்பனை
23. கற்குழியை நடத்துதல்
24. கல் அரைக்கும் நிலையம் நடத்துதல்
25. மோட்டார் சைக்கிள் விற்பனை நிலையம் நடத்துதல்
26. சேதனப் பசளை தயாரித்தல்
27. அரிசி ஆலை நடத்துதல்- பாரிய அளவு
28. மர ஆலை நடத்துதல்
29. தொலைத்தொடர்பு பரிவர்த்தனைக் கோபுரம் -ஒரு உபகரணத் தொகுதிக்கு
30. கணக்குப் பதிதல்
31. தைத்த ஆடைத் தொழிலகம் நடத்துதல்

### அட்டவணை II

| நிரல் I<br>வர்த்தகத்தின் வருடாந்த வருமானம் | நிரல் II<br>செலுத்த வேண்டிய வருடாந்த வரி<br>ரூபா ச. |
|---|---|
| ரூ. 6,000 வரை | இல்லை |
| ரூ. 6,000 முதல் ரூ. 12,000 வரை | 90 0 |
| ரூ. 12,000 ரூபாவுக்கு மேற்பட்ட ஆனால் ரூ. 18,750 வரை | 180 0 |
| ரூ. 18,750 ரூபாவுக்கு மேற்பட்ட ஆனால் ரூ .75,000 வரை | 560 0 |
| ரூ. 75,000 ரூபாவுக்கு மேற்பட்ட ஆனால் ரூ. 1,50,000 வரை | 1,200 0 |
| ரூ. 1,50,000 இற்கு மேல் | 3,000 0 |

10- 802/1

***மினிப்பே பிரதேச சபை***

*வர்த்தகங்களுக்கான துணை விதிகளின் கீழ் வரிகளும் அனுமதிப்பத்திரக் கட்டணங்களும் விதித்தல் - 2015*

*2014, ஓகத்து மாதம் 22 ஆந் திகதி நடைபெற்ற மினிப்பே பிரதேச சபையின் பொதுக் கூட்டத்தில் தீர்மான இலக்கம் 06- 2 இன்கீழ் பின்வரும் பிரேரணை நிறைவேற்றப்பட்டுள்ளதென இத்தால் பொதுமக்களுக்கு அறிவிக்கப்படுகின்றது.*

*இதற்கமைய ஏதும் துணை விதியின் கீழ் மினிப்பே பிரதேச சபையின் நிருவாக எல்லைக்குள் ஏதும் தொழில்களை நடத்திச் செல்வதற்கென 2015 ஆம் வருடத்தில் மினிப்பே பிரதேச சபை வழங்கும் ஒவ்வொரு அனுமதிப்பத்திரத்தின் மீதும் கட்டணமொன்று அறவிடப்படும் என்பது இத்தால் பொதுமக்களுக்கு அறிவிக்கப்படுகின்றது.*

*டபிள்யூ. ஏ. வசந்த ஜயசுந்தர*
*தலைவர்,*
*மினிப்பே பிரதேச சபை.*

*பிரதேச சபை அலுவலகம்,*
*மினிப்பே,*
*2014, செத்தெம்பர் 09.*

***தீர்மானம்***

*1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 147 ஆவது பிரிவுடன் சேர்த்து வாசிக்கக்கூடிய 149 ஆவது பிரிவின் கீழ் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின்படி மினிப்பே பிரதேச சபையின் அதிகார எல்லைக்குள் நடாத்தப்படும் பின்வரும் அட்டவணையின் I ஆவது நிரலில் குறிப்பிடப்பட்டுள்ள ஏதும் தொழில் முயற்சிகள் தொடர்பில் நிரல் II இல் காட்டப்பட்டுள்ளதன் அடிப்படையில் 2015 ஆம் வருடத்துக்கான அனுமதிப்பத்திரக் கட்டணத்தை விதித்து அறவிடுவதற்கும்,*

